Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 92 / 2020

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.4**

| | | | |
|---|---|---|---|
| Name: | முகமது அலி | Calling: | வியாபாரம் |
| Father's Name: | அஜீசூர்ரகுமான் | Religion: | |
| Village: | காதர்பேட்டை | Age: | 53 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 25.10.2024

(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 4 முதன்மை விசாரணை

அஸ்கர் அலி, த/பெ. ஜாவித் பாஷா, நவித் த/பெ.நசீர்பாஷா தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, ஆனால் அவர்கள் தான் திருடியதாக சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் எதிரி அஸ்கர் அலி மற்றும் எதிரி நவீத்தின் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் 13.04.2019ம் தேதி 17.00 மணி மற்றும் 18.00 மணி குறிப்பிடப்பட்ட கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையது தான், அதை நான் எனது சகளை நியாஸ் அகமது வீட்டில் 13ம் தேதி திருடுபோனது. திருடர்ள் இரு நபர்களை போலிசார் பிடித்ததாக சொன்னார்கள். எங்கு பிடித்தார்கள் என்று தெரியாது. போலிசார்கேட்டுக்கொண்டதற்கிணங்க போட்டுக் கொடுத்தேன். எந்த இடம் என்று 4 வருடங்கள் ஆனதால் தற்போது நினைவில்லை. எதிரிகளை தெரியுமா என்றால் அவர்களை பிடித்ததற்கு பிறது நான் பார்த்தேன். ஆனால் அவர்களை தற்போது எனக்கு நினைவில்லை. **(எதிரி**

**அஸ்கர் அலி மற்றும் எதிரி நவீத்தின் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் 13.04.2019ம் தேதி 17.00 மணி மற்றும் 18.00 மணி குறிப்பிடப்பட்ட கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

புகார்தாரர் நியாஸ் அகமது எனது உறவினர். அவரது வீட்டில் திருடுபோனது சம்மந்தமாக போலிசார் என்னை சாட்சியாக இருக்கும்படி கேட்பித்து எனது பெயர், முகவரி போன்ற விவரங்களை குறித்துகொண்டு 3 கையெழுத்துக்களை பெற்றார்கள் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாள்களில் மேற்படி விவரத்தை தவிர வேறு எந்த விவரங்களும் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் சரிதான். தற்சமயம் நீதிமன்றத்தில் காட்டப்பட்ட 3 கையெழுத்துக்கள் தான் நான் போட்ட கையொப்பம் ஆகும். அதில் தற்சமயம் வேறு ஏதேனும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் முதன்மை விசாரணையில் கூறிய விவரங்கள் போலிசார்சொல்லியதின்பேரில் தான் தெரியும் என்றால் சரிதான், பிடித்த பிறகு நான் எதிரிகளை பார்த்தேன். என் முன்னிலையில் யாரிடமும் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றாலும், பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரிதான். வழக்கு விவரம் எதுவும் சரியாக தெரியாது என்றால் சரிதான்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) முகமது அலி

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./–) D.Ravi,
Judicial Magistrate (FAC), Vaniyambadi.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 92 / 2020

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.5**

| | | | |
|---|---|---|---|
| Name: | முகமது அஸ்லாம் | Calling: | தோல் வியாபாரம் |
| Father's Name: | நிசார்அகமத் | Religion: | |
| Village: | காதர்பேட்டை | Age: | 52 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 25.10.2024

(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 5 முதன்மை விசாரணை

2019ம் வருடம் எனது பக்கத்து வீட்டில் திருடுபோனது. அதற்காக போலிசார் வந்து விசாரித்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதற்காக நான் போட்ட கையொப்பங்கள் தான் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் . (எதிரி அஸ்கர் அலி மற்றும் எதிரி நவீத்தின் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் 13.04.2019ம் தேதி 17.00 மணி மற்றும் 18.00 மணி குறிப்பிடப்பட்ட கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பங்கள்) உள்ள 4 கையெழுத்துகள் ஆகும். **(எதிரி அஸ்கர் அலி மற்றும் எதிரி நவீத்தின் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் 13.04.2019ம் தேதி 17.00 மணி மற்றும் 18.00 மணி குறிப்பிடப்பட்ட கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.10 முதல் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

கடந்த 13.04.2019ம் தேதி மதியம் 03.00 மணிக்கு பாலாற்றங்கரை முனீஸ்வரன் கோவிலிடம் சென்றேனா என்றால் இல்லை. அங்கு போலிசார் எதிரிகள் இருவரையும் பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார்களா என்றால் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் அஸ்கர் அலி, நவீத் இருவரும் சேர்ந்து பல இடங்களில் திருடியதாக ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்ததற்கு சாட்சி கையொப்பங்கள் செய்தேனா என்றால் இல்லை. அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் தண்டு மாரியம்மன் கோவில் பின்புறம் அதே நாள் மாலை 05.00 மணிக்கு மணலில் புதைத்து வைத்திருந்த தங்க வளையல், மோதிரம், வைரக்கம்மல், குழந்தை மோதிரம், கேமரா, லேடிஸ் வாட்ச் – 2 ஆகியவற்றை எதிரி நவீத் எடுத்து ஆஜர் செய்ததை போலிசார் மகசரில் கைப்பற்றியதற்கு சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் நான் அங்கு செல்லவில்லை. அதேபோல், அதே நாள் மாலை 06.00 மணிக்க பாலாற்றில் உள்ள செக்டேம் அருகிலுள்ள புல் புதரிலிருந்து எதிரி அஸ்கர்அலி எடுத்து ஆஜர் செய்த தங்க காசு, வைரக்கம்மல், டாலர் செயின், கம்மல், கவரிங் நகைகள் ஆகியவற்றை போலிசார் மற்றொரு மகசரில் கைப்பற்றியதற்கும் ஒரு சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் அங்கும் செல்லவில்லை. போலிஸ் விசாரணையில் உண்மை சங்கதிகளை கூறிவிட்டு தற்போது எதிரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) முகமது அஸ்லாம்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./–) D.Ravi,
Judicial Magistrate (FAC), Vaniyambadi.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 92 / 2020

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.6**

| | | | |
|---|---|---|---|
| Name: | முபாரக் | Calling: | தலைச்சுமை வியாபாரி |
| Father's Name: | அப்துல்ரசீத் | Religion: | |
| Village: | ஜாப்ராபாத் | Age: | 29 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 25.10.2024

(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 6 முதன்மை விசாரணை

நவீத் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு விசயமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

எதிரி நவீத் எனக்கு மிக நெருங்கிய நண்பர் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு பணத்தட்டுப்பாடு என்றால் அவரிடம் நான் அடிக்கடி பணம் வாங்குவேனா என்றால் இல்லை. 11.04.2019ம் தேதி எனக்கு பணம் தேவைப்பட்டதால் எதிரி நவீத்திடம் நான் பணம் கேட்டதற்கு அவர் பணம் இல்லை, அவரது அம்மாவின் செயின் என்று என்னிடம்கொடுத்து அடகு வைத்து கொள்ளும்படி என்னிடம் சொன்னாரா என்றால் அந்த நேரத்தில்

நான் சென்னையில் வேலை செய்து கொண்டிருந்தேன். பிறகு ரம்ஜான் பண்டிகைக்கு நான் ஊருக்கு வந்த சமயம் எனது அப்பா வைத்திருந்த மேற்படி நகையை போலிசார் விசாரித்ததால் திருட்டு நகை என தெரிந்ததால் அதை நான் தான் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று ஒப்படைத்ததாக போலிஸ் விசாரணையில் உண்மை சங்கதிகளை கூறிவிட்டு தற்போது எதிரி நவீத் எனது நண்பர் என்பதால் எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) முபாரக்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./–) D.Ravi,
Judicial Magistrate (FAC), Vaniyambadi.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 92 / 2020

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.7**

| | | | |
|---|---|---|---|
| Name: | அனீஸ்அகமத் | Calling: | இரும்பு வியாபாரம் |
| Father's Name: | அப்துல்ரசீத் | Religion: | |
| Village: | முஸ்லீம்பூர் | Age: | 64 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 25.10.2024

(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 7 முதன்மை விசாரணை

என்னிடம் காட்டப்படும் 20.05.2019, 14.30 மணியிட்ட கைப்பற்றுதல் மகசரிலுள்ள சாட்சி கையொப்பங்களில் எதுவும் என்னுடையது அல்ல. ஏதோ திருட்டு வழக்கிற்காக என்னை சாட்சியாக போட்டிருப்பதாக போலிசார் என்னிடம் கூறினார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

சாட்சி அ.சா.6 முபாரக்கை எனக்கு தெரியாது. முபாரக் அவரது நண்பரிடம் ஒரு தங்க செயின் ஒன்றை வாங்கியிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பின்னிட்டு திருட்டு நகை என தெரிந்ததும் அவர் அந்த நகையை காவல் நிலையத்தில் சென்று ஒப்படைத்தாரா என்றால் அது பற்றி

தெரியாது. அதை போலிசார் மகசரில் கைப்பற்றியதற்கு சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் தெரியாது. போலிஸ் விசாரணையில் உண்மை சங்கதிகளை கூறிவிட்டு தற்போது எதிரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) அனீஸ் அகமத்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./–) D.Ravi,
Judicial Magistrate (FAC), Vaniyambadi.